Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 284/2023 |
| Deposition of witness for | :: | PW. 2 |
| Name | :: | **இந்திரா** |
| Husband's Name | :: | பரமேஸ்வரன் |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.

05.08.2025

முதல் விசாரணை:

1. நான் அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் பத்திரம் சவுண்டையா தெருவில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 17.09.2023 ம் தேதி இரவு 07.00 மணியளவில் எதிரி சந்திரசேகரன் எங்கள் வீட்டு காம்பவுண்டு சுவரில் உள்ள 20 செங்கற்களை அடித்து உடைத்து சேதப்படுத்திவிட்டார். அதற்கு பிறகு நானும், எனது கணவர் அசா.1 ம் போய் கேட்டதற்கு அப்படித்தாண்டா தேவடியா மகனே செய்வோம் என்றும், வெட்டிபுடுவேன், குத்திபுடுவேன் என்றும், கொலை செய்ய கூட தயங்கமாட்டேன் என்று சந்திரசேகரன் சொன்னார். எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மதுரை திருமங்கலத்தில் உள்ள எஸ்கேஜி மருத்துவமனையில் கர்ப்பபை ஆப்ரேஷனுக்காக சிகிச்சையில் இருந்தபோது என்னுடன் எனது கணவர் அசா.1 ம் இருந்தார்.

2. மருத்துவமனையில் 24.09.2023 ம் தேதி நானும், எனது கணவரும் இருந்தபோது எங்கள் தெருவை சேர்ந்த ரவிசந்திரன் என்பவர் அன்று மதியம் 01.30 மணியளவில் போன் செய்து எங்களுக்கு சொந்தமான

TN 39 AZ 0173 TVS Motor சைக்கிளை ஆஜர் எதிரி அருண்குமார் சேதப்படுத்தி சைடு கண்ணாடிகள், ெஹட்லைட் அதனுடைய டூம் மற்றும் இண்டிகேட்டர்களை சேதப்படுத்திவிட்டார் என்று போனில் சொன்னார். பின்னர் 26.09.2023ம் தேதி எனது கணவர் அசா.1 கிளம்பி வந்து சேதப்படுத்திய எங்களது மோட்டார் சைக்கிளை பார்வையிட்டு நகர் காவல் நிலையம் சென்று புகார் மனு அளித்தார். என்னையும் போலீசார் விசாரித்தனர். இந்த சம்பவத்திற்கு முன்பு மூன்று தடவை எதிரிகள் மது அருந்திவிட்டு தகராறு செய்ததற்காக அசா.1 எனது கணவர் புகார் அளித்தும் எதிரிகள் இனிமேல் தகராறு செய்ய மாட்டோம் என்று எழுதி கொடுத்துவிட்டு வந்து மறுபடியும் மேற்கண்ட 17.09.2023, 24.09.2023ம் தேதிகளில் மேற்கண்ட பிரச்சனை செய்துள்ளார்கள். கடந்த 2020ல் இருந்து 2025 வரை எதிரிகள் என்னை தொடர்ந்து தொந்தரவு செய்து வருகிறார்கள். எனது கணவர் வேலைக்கு சென்றபிறகு நான் வீட்டில் தனியாகதான் இருப்பேன். அப்போதும் இவ்வழக்கின் எதிரிகளும் மற்ற நபர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு முறையும் என்னை அசிங்கமாக பேசி தொடர்ந்து தொந்தரவு செய்து வருகிறார்கள். காவல் நிலையத்தில் தொடர்ந்து புகார் கொடுத்தும் எந்த பயனும் இல்லை. எதிரிகளுடன் தொடர்ந்து போராடி கொண்டேதான் இருக்கிறோம். நிம்மதியாக வாழ விடாமல் தொந்தரவு செய்கிறார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 17.09.2023ம் தேதி இரவு 07.00 மணியளவில் வீட்டின் சுற்று சுவரை உடைத்ததாக கூறுவது தொடர்பாக நானும், எனது கணவரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அதற்கு முன்பாகவும் எதிரிகள் மீது அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எதிரிகள் எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் புகார் கொடுத்த பிறகு கொடுத்தார்கள். எதிரிகள் என்மீதும், எனது கணவர் மீதும் புகார் கொடுத்த விவரம் எனது கணவருக்கும் தெரியும் என்றால் சரிதான். என் கணவர் மீது பெண்களை ஆபாசமாக பேசி, பார்த்ததாக எதிரிகள் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை, பொய் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

மேற்படி காரணத்தினால் தான் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் தான் பிரச்சனை செய்தார்கள். நாங்கள் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்த காரணத்தினால் தான் எங்கள் முந்தைய புகார்களின் மீது காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த சேதமும் ஏற்படுத்தவில்லை என்றாலும் வழக்கிற்காக எதிரிகள் மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எங்கள் வீட்டின் எதிரே குடியிருக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் எதிரிகள் வீட்டின் உரிமையாளரிடம் எதிரிகளை பற்றி சொன்னதால் அவர் எதிரிகளை வீட்டை காலி செய்ய சொன்னார். எதிரிகள் வீட்டை காலி செய்து மூன்று மாதம் ஆகிறது.

**மறு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 284/2023 |
| Deposition of witness for | :: | PW. 1 |
| Name | :: | பரமேஸ்வரன் |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

எதிரி ஆஜர். எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

05.08.2025

முதல் விசாரணை:

1. நான் அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் பத்திரம் சவுண்டையா தெருவில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்கு சந்து பகுதியில் குடியிருக்கும் சோலைராஜ் மகன் சந்திரசேகர் குடும்பமாக வசித்து வருகிறார். அவருக்கு அருகில் அவரது மைத்துனர் அருண்குமார் என்பவரும் அருகில் மற்றொரு வீட்டில் குடியிருந்து வருகிறார். சந்திரசேகரின் தம்பிகள் இருவரும் டிரம் செட் வாசிப்பவர்கள். இந்த நான்கு நபர்களும் தினமும் இரவு 07.00 மணிக்கு மேல் சாராயம் குடித்துவிட்டு வந்து அவர்களுக்குள்ளாகவே அசிங்க அசிங்கமாக பேசி அதிக சத்தத்துடன் சண்டையிட்டு கொள்வார்கள். இதை நான் கண்டிக்கும்போது எல்லாம் என்னையும், என் குடும்பத்தாரையும் திட்டி வந்தார்கள். இது சம்மந்தமாக நான் கடந்த 02.11.2020, 19.10.2022, 18.04.2023 ஆகிய தேதிகளில் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம் சென்று மேற்கண்ட சந்திரசேகர், அருண்குமார், அவரது தம்பிகள் முனியாண்டி, பாலுகுட்டி ஆகிய நான்கு பேர் மீதும் புகார் கொடுத்து மனு ரசீது வாங்கி உள்ளேன்.

2. காவல் நிலையத்தில் மேற்படி மனு மீது விசாரணை செய்து அதன்பின் எதிரிகள் மேற்கண்ட 4 பேரும் இனிமேல் எந்த பிரச்சனையும் வைத்து கொள்ள மாட்டோம் என்று ஒவ்வொரு தேதியிலும் புகார் கொடுக்கும்போதும் எழுதி கொடுத்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகும் அவர்கள் திருந்தாமல் தொடர்ந்து சண்டை போட்டு கொண்டு வந்தார்கள். அதனால் நான் வேறு வழியில்லாமல் நான் விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் மேற்கண்ட 4 நபர்கள் மீதும் புகார் மனு கொடுத்தேன். அதை மனதில் வைத்து கொண்டு சந்திரசேகர் கடந்த 17.09.2023ம் தேதியன்று இரவு 07.00 மணியளவில் நானும், எனது மனைவி இந்திரா ஆகிய நாங்கள் இருவரும் எங்கள் வீட்டில் இருந்தபோது சந்திரசேகர் சாராயம் குடித்துவிட்டு வந்து எங்களுக்கு சொந்தமான காம்பவுண்டு சுவரை சேதப்படுத்தி அதிலிருந்த 20 செங்கற்களை உடைத்துவிட்டார். ஏன் செங்கற்களை உடைக்கிறாய் என்று கேட்டதற்கு அப்படித்தாண்டா தாயோழி செய்வேன் என்றும், தேவடியா மகனே நீ எங்கே வேண்டுமானாலும் போய் சொல்லு யாரும் என்னை ஒன்றும் செய்யமுடியாது என்றும் மீறி எங்காவது சொன்னாய் என்றால் உன்னை கொலை செய்ய கூட தயங்கமாட்டேன் என்று என்னை மிரட்டினார். இந்த சூழ்நிலையில் எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மதுரை திருமங்கலத்தில் உள்ள எஸ்கேஜி மருத்துவமனையில் சேர்த்து கர்ப்பபை அறுவை சிகிச்சையின்போது உடன் இருந்தேன்.

3. அப்போது எங்கள் தெருவை சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவர் கடந்த 24.09.2023ம் தேதி போன் செய்து மதியம் 01.30 மணியளவில் எனக்கு சொந்தமான டிவிஎஸ் எக்ஸ் எல் பதிவு எண். TN 39 AZ 0173 என்ற வாகனத்தை மேற்படி எதிரி அருண்குமார் என்பவர் கீழே தள்ளிவிட்டு ஹெட்லைட், சைடு கண்ணாடிகள், ஹெட்லைட் டூம், சைடு ஸ்டாண்டு ஆகியவற்றை சேதப்படுத்தியதாக என்னிடம் தகவல் சொன்னார். எனது மனைவியோடு உதவியாக இருந்ததால் 26.09.2023ம் தேதி எனது வீட்டிற்கு வந்து சேதப்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை பார்த்து அதன் சேதத்தை பார்த்துவிட்டு அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொண்டேன்.

என்னிடம் காட்டப்படும் புகார்மனு மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. மேலும் சந்திரசேகர் சேதப்படுத்திய செங்கல் உடைந்த பகுதிக்கு சீர் செய்ய 2000/− ரூபாயும், அருண்குமாரால் சேதப்படுத்தப்பட்ட எனது இருசக்கர வாகனத்தை பழுது பார்க்க ரூபாய் 3000/− மும் ஆக மொத்தம் 5,000/− ரூபாய் செலவு செய்தேன். புகார் கொடுத்தன் அடிப்படையில் போலீசார் அன்று விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது வீட்டிற்கு எதிர் வீட்டில் தான் எதிரிகள் வீடு இருக்கிறது என்றால் சரிதான். நான் ஒவ்வொரு முறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோதும் எதிரிகளும் என்மீது புகார் கொடுத்தார்கள் என்றாலும் அது தொடர்பாக விசாரணை நடந்தது என்றாலும் சரியல்ல. 1 வது எதிரி என்மீது பெண்களை தவறாக ஆபாசமாக பேசியது தொடர்பாக புகார் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. எதிரிகள் என்னுடன் பிரச்சனை செய்ததாக கூறும் விவரங்கள் எனது வீட்டின் அருகே உள்ள சங்கர நாராயணன், சங்கரபாண்டியன் பானுமதி, பால்பாண்டி, தனம், மணிமேகலை ஆகியோர்களுக்கு தெரியுமா என்றால் தெருவில் உள்ள அனைவருக்குமே தெரியும், அதனால் அவர்களுக்கும் தெரியும்.

2. நான் கொடுத்த புகாரில் எந்த தேதியில் எவ்வளவு பொருட்களை எதிரிகள் சேதப்படுத்தினார்கள் என்று அதன் மதிப்புடன் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். ரவிசந்திரன் மூலமாக தான் எனது இருசக்கர வாகனம் சேதப்படுத்திய விவரம் எனக்கு தெரியவந்தது என்பதை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை எனது புகாரில் குறிப்பிடாமல் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது பொருட்களை ஒரு போதும் சேதப்படுத்தவில்லை என்றாலும், எதிரிகள் மீது உள்ள முன்பகையை மனதில் வைத்து கொண்டு பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

3. நான் கொடுத்த புகாரில் இருசக்கர வாகனத்தின் எந்த பாகங்கள் சேதப்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இருசக்கர வாகனம் சேதமாகிவிட்டது என்று தான் சொல்லியுள்ளேன் மற்ற விவரங்களை ஆவணமாக கொடுத்துள்ளேன்.

**மறுவிசாரணை − இல்லை.**